(ஈ) புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைக்காரர்கள் (தற்காலிக நிவாரண) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைக்காரர்கள் (தற்காலிக நிவாரண) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, தற்காலிக நிவாரணம் என்ற பெயரால் மூன்று தடவை சட்டம் வந்து விட்டது. ஏற்கனவே நிரந்தர நிவாரணம் அளிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். ஆனால் நீங்கள் நிரந்தர நிவாரணம் அளிப்பதற்குப் பதிலாக 'அரியர்ஸ்' வசூலிப்பதை தள்ளிப்போடுகிறீர்கள். இது அவர்களுக்கு நிவாரணமாகாது. 'ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸ்'ல் நோக்கத்தைச் சொல்லியிருக்கிறீர்கள். நோக்கத்திற்கும் ரீசனுக்கும் என்ன தொடர்பு என்று தெரியவில்லை. தலைவலிக்கு தலையணையை மாற்றுவதைப்போல இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறீர்கள். இது கண்டிக்கத் தக்கது; வருந்தத்தக்கது; இதை ஏற்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :— "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைக்காரர்கள் (தற்காலிக நிவாரண) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(4) முதல் துணை நிதி அறிக்கை—1979–80.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டின் முதலாவது துணை மதிப்பீடுகளை அவையில் வைக்க முன் வந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான அறிக்கை ஒன்றும் அவை முன் வைக்கப்பட்டுள்ளது.